

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.8.2025) சென்னை, முரசொலி வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி, தயாநிதிமாறன் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளையொட்டி நேற்று (07.08.2025) ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளையொட்டி நேற்று (7.8.2025) சென்னை அண்ணா அறிவாலயத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஏற்பாட்டின் பேரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் சார்பில், 'தியாகமறவர்' சி.சிட்டிபாபு தொகுத்த "தி.மு.க வரலாறு", முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எழுதிய "தமிழ்நாடு போராடும் ! தமிழ்நாடு வெல்லும்!", "இளைய திராவிடம் எழுகிறது!" இளம் பேச்சாளர்களுக்கான பயிற்சி முகாம் கட்டுரைகள், முனைவர். இரா. சபாபதி மோகன் எழுதிய "மாநில சுயாட்சி முழக்கம், கோவி. லெனின் எழுதிய "திராவிட இயக்க வரலாறு கேள்விபதில், தமிழன் பிரசன்னா எழுதிய "இந்தித் திணிப்பை எதிர்க்கிறோம் ஏன் ?", சூர்யா கிருஷ்ணமூர்த்தி எழுதிய "இந்தியாவுக்கு வழிகாட்டும் திராவிடமாடல்!", சு.விஜயபாஸ்கர் எழுதிய "இந்தியாவில் சமூக நீதியும் இட ஒதுக்கீடும்" ஆகிய எட்டு நூல்களை வெளியிட்டார். இந்நிகழ்வில், கழகத்தின் பொதுச்செயலாளரும், நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சருமான துரைமுருகன், கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு, கழக கொள்கை பரப்புச் செயலாளர் சபாபதி மோகன், கழக தொழில்நுட்ப அணி ஆலோசகர் கோவி. லெனின், தலைமைக்கழக செய்தி தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா, துணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி, நக்கீரன் கோபால், கலைஞர் செய்திகள் தொலைக்காட்சியின் செய்திப் பிரிவு ப. திருமாவேலன், முரசொலி நாளிதழின் செய்தி ஆசிரியர் கே.சேது மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளையொட்டி நேற்று (7.8.2025) சென்னை அண்ணா அறிவாலயத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஏற்பாட்டின் பேரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், "கலைஞர் நிதிநல்கை" திட்டத்தைத் தொடங்கி வைத்து அதன் இலச்சினையை வெளியிட, திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு அவர்கள் பெற்றுக்கொண்டார். இந்நிகழ்வின்போது, நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, மூத்த பத்திரிகையாளர் நக்கீரன் கோபால், கலைஞர் செய்திகள் தொலைக்காட்சியின் செய்திப் பிரிவு ப. திருமாவேலன், முரசொலி நாளிதழின் செய்தி ஆசிரியர் கே.சேது ஆகியோர் உடனிருந்தனர்.

## முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாளையொட்டி – முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் 8 புதிய நூல்கள் வெளியீடு!

# கலைஞர் மாணவப் பத்திரிகையாளர் திட்டம் - கலைஞர் நிதிநல்கை திட்டம்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, ஆக. 8 -**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளையொட்டி "கலைஞர் மாணவப் பத்திரிகையாளர் திட்டம்" மற்றும் "கலைஞர் நிதிநல்கை" திட்டத்தைத் தொடங்கி வைத்து, முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் 8 புதிய நூல்களை கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்.**

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளையொட்டி நேற்று (7.8.2025) சென்னை அண்ணா அறிவாலயத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஏற்பாட்டின் பேரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், "கலைஞர் மாணவப் பத்திரிகையாளர் திட்டம்" மற்றும் "கலைஞர் நிதிநல்கை" திட்டத்தைத் தொடங்கி வைத்து, அதன் இலச்சினையை வெளியிட்டு, முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் 8 புதிய நூல்களை வெளியிட்டார்.

### இலச்சினை வெளியீடு!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளான நேற்றையதினம் சென்னை, அண்ணா அறிவாலயத்தில், பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரது திருவுருவச் சிலைகளுக்கு அருகில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கலைஞர் மாணவப் பத்திரிகையாளர் திட்டத்தைத் தொடங்கி வைத்து, அதன் இலச்சினையை வெளியிட, மூத்த பத்திரிகையாளர் நக்கீரன் கோபால் அவர்கள் பெற்றுக்கொண்டார். மேலும், கலைஞர் மாணவர் பத்திரிக்கையாளர் திட்டத்தின் இணைய தளமும் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் இளம் தலைமுறையினர் சிறந்த பத்திரிகையாளராக பயிற்சி பெறவும், திராவிட இயக்கத்திற்கும், சமூகத்திற்கும் தொண்டாற்றிட வழிகாட்டியாகவும் விளங்கும்.

### இளம் ஆய்வாளர்கள் 15 பேருக்கு தலா ரூ.1 லட்சம்!

அதைத்தொடர்ந்து, திராவிட இயக்க இளம் ஆய்வாளர்களைக் கண்டறிந்து, அவர்களை வளர்த்தெடுத்து ஊக்குவிக்கும் விதமாக, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், "கலைஞர் நிதிநல்கை" திட்டத்தை தொடங்கி வைத்து, அதன் இலச்சினையை வெளியிட, திராவிட இயக்க ஆய்வாளர் க. திருநாவுக்கரசு அவர்கள் பெற்றுக்கொண்டார். இத்திட்டத்தின் மூலம் இளம் ஆய்வாளர்கள் 15 பேருக்கு ஆண்டுக்கு தலா 1 லட்சம் ரூபாய் வழங்கப்படும்.

### 8 புதிய நூல்கள் வெளியீடு!

பின்னர், முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் சார்பில் தயாரிக்கப்பட்ட 'தியாகமறவர்' சி.சிட்டிபாபு அவர்கள் தொகுத்த "தி.மு.க வரலாறு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுதிய "தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!, "இளைய திராவிடம் எழுகிறது!' இளம் பேச்சாளர்களுக்கான பயிற்சி முகாம் கட்டுரைகள், முனைவர் இரா. சபாபதி மோகன் அவர்கள் எழுதிய "மாநில சுயாட்சி முழக்கம்", கோவி. லெனின் அவர்கள் எழுதிய "திராவிட இயக்க வரலாறு" கேள்வி – பதில்,

தமிழன் பிரசன்னா அவர்கள் எழுதிய "இந்தித் திணிப்பை எதிர்க்கிறோம் ஏன்?, சூர்யா கிருஷ்ணமூர்த்தி அவர்கள் எழுதிய "இந்தியாவுக்கு வழிகாட்டும் திராவிடமாடல்!, சு.விஜயபாஸ்கர் அவர்கள் எழுதிய "இந்தியாவில் சமூக நீதியும் இட ஒதுக்கீடும் ஆகிய எட்டு புதிய நூல்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட, திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளரும், நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில், கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ ராசா, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், கலைஞர் செய்திகள் தொலைக்காட்சி ஆசிரியர் ப. திருமாவேலன், முரசொலி நாளிதழின் செய்தி ஆசிரியர் கே. சேது, கழக கொள்கை பரப்புச் செயலாளர் சபாபதி மோகன், கழக தொழில்நுட்ப அணி ஆலோசகர் கோவி. லெனின், தலைமைக் கழக செய்தி தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா, துணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி, முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் நிர்வாகி நீரை மகேந்திரன், மறைந்த எழுத்தாளர் சு. விஜயபாஸ்கர் அவர்களின் மனைவி திருமதி காயத்ரி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

---

### மாபெரும் தொலைநோக்காளர் – 'பாரத ரத்னா'

## எம்.எஸ்.சுவாமிநாதன் அடியொற்றி மாணவர்கள் சமூகப் பணியாற்ற வேண்டும்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, ஆக. 8 -**

**'பாரத ரத்னா' எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களின் நூற்றாண்டுப் பிறந்தநாளையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:**

பசுமைப் புரட்சிக்கு வித்திட்டுப் பசியாற்றிய மானுடநோக்கு கொண்ட அறிவியலாளர் 'பாரத ரத்னா' எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களின் நூற்றாண்டுப் பிறந்த நாள் இன்று!

தமது அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமான எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களது பெயரிலான ஆராய்ச்சி அறக்கட்டளைக்கு நிலம் வழங்கி, குடியரசுத் தலைவராக இருந்த கே.ஆர்.நாராயணன் அவர்களுடன் இணைந்து, அங்குள்ள JRD Tata சுற்றுச்சூழல் தொழில்நுட்ப மையத்தைத் திறந்தும் வைத்தார் அன்றைய முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள்.

அவரது வழியிலான நமது திராவிடமாடல் அரசும், போரூர் Wet land Park, தஞ்சை ஈச்சங்கோட்டை வேளாண் கல்லூரி ஆகியவற்றுக்குத் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களது பெயரைச் சூட்டியுள்ளதோடு,

பயிர்ப் பெருக்கம் மற்றும் மரபியல் பாடங்களில் அதிக மதிப்பெண் பெறும் மாணவருக்கு எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களின் பெயரில் ஆண்டுதோறும் விருது வழங்கப்படும் என்றும் அறிவித்து அவரது நினைவைப் போற்றி வருகிறோம்.

Climate Change உட்பட இன்று நாம் எதிர்கொண்டு வரும் பல சவால்களைப் பல பத்தாண்டுகளுக்கு முன்பே கணித்து, எச்சரித்த மாபெரும் தொலைநோக்காளரான எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களை அடியொற்றி, மேலும் பல மாணவர்கள் சமூகத்துக்குப் பணியாற்ற வேண்டும் என அவரது நூற்றாண்டில் கோரிக்கையாக முன்வைக்கிறேன்!

தந்தையின் பணியையும் புகழையும் போற்றும் திருமிகு. சவுமியா சுவாமிநாதன் அவர்களது பணி சிறக்கவும் வாழ்த்துகள்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

### இலங்கைக் கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்ட

## தமிழக மீனவர்கள் - படகுகளை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்வீர்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் – ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு கடிதம்!

**சென்னை, ஆக. 8 -**

**இலங்கைக் கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்ட மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 14 மீனவர்கள், நேற்று முன்தினம் (06.08.2025) இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், இலங்கைக் காவலில் உள்ள அனைத்து தமிழக மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்திட வேண்டுமென்று வலியுறுத்தி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று முன்தினம் (06.08.2025) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், இலங்கைக் கடற்படையினரால் 06.08.2025 அன்று அதிகாலை 14 இந்திய மீனவர்கள், அவர்களது இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிப் படகு மற்றும் ஒரு பதிவு செய்யப்படாத நாட்டுப்படகுடன் சிறை பிடிக்கப்பட்டதை ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தனி கவனத்திற்குக் கொண்டு வருவதாக முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட் டுள்ளார்.

இலங்கைக் கடற்படையினரால் தமிழ்நாட்டு மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவதை முடிவுக்குக் கொண்டுவர ஒன்றிய அரசு தூதரக ரீதியாக தலையிட வேண்டும் என்று தான் பலமுறை வேண்டுகோள் விடுத்த போதிலும், இதுபோன்ற கைது சம்பவங்கள் தொடர்வது மிகவும் கவலையளிக்கிறது என்று குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், 2025 ஆம் ஆண்டில் மட்டும் நடைபெற்ற கைது சம்பவங்களில், இது 17வது சம்பவம் என்றும் தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

தற்போது, 237 மீன்பிடிப் படகுகளும், 80 மீனவர்களும் இலங்கை அதிகாரிகளின் காவலில் இருப்பதாகவும், மீனவர்கள், அவர்களின் ஒரே வாழ்வாதாரமான பாரம்பரிய நீர்நிலைகளில் மீன்பிடிக்கும் உரிமையை இழந்துள்ளதை தனது கடிதத்தில் வேதனையுடன் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டி யுள்ளார்.

எனவே, கைது செய்யப்பட்ட அனைத்து தமிழக மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவில் விடுவிப்பதற்குத் தேவையான உடனடி நடவடிக்கைகளை எடுத்திடுமாறு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களை, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.